www.padippakam.com

# செஞ்சக்தி

செய்திப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது

1998 ஜூலை அணி 02 படை 12 நன்கொடை 7/=

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்

## அவசரகால சட்டம் அமுல்ப்படுத்த முன்

# நாடு பூராவும் பயங்கர வன்முறை!

**ஜூலை மாதக்கடைசியில் அல்லது ஆகஸ்ட் 8ம் திகதி மாகாண சபைத் தேர்தலை தள்ளிப் போடுவலதற்காக நாட்டில் ஒரு பயங்கர கலவரத்தை உருவாக்குவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அவசர காலச் சட்டத்தை நாடு பூராவும் அமுல்ப்படுத்துவதை நியாயப்படுத்தத் தேவையான பயங்கர நிலையை நாட்டில் ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதாக "செஞ்சத்தி"ற்கு நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.**

நாடு பூராவும் அவசரகால சட்டத்தை அமுல்ப்படுத்துவதாயிருந்தால் அதற்குத் தேவையான காரணங்கள் நாட்டில் இருக்க வேண்டியதோடு, அப்படியான காரணங்களை மேலோட்டமாகவாவது காட்டாமல் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினால் அது நீதிமன்றத்தின் முன் சவாலாக அமையுமாகையால், செயற்கையாக பயங்கரத் தன்மையை உருவாக்கவேண்டுமென்று அரச உயரதிகாரிகள் மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. தற்போது பொ.ஐ.மு. அரசியல் வாதிகளின் ஒத்துழைப்போடு நாட்டின் பல இடங்களில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவற்றை மேலும் விரிவுபடுத்த இடமளிக்க வேண்டுமென்றும், அவசரகாலச் சட்டத்தை அமுல்ப்படுத்த இவற்றையும் பயன்படுத்த வேண்டுமென்வும் உயரதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையின்போது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

'செஞ்சக்தி'க்குக் கிடைக்க

6ம் பக்கம்பார்க்க...



### தோழர் விஜேவீர அவர்களின்
55வது பிறந்த நாள்

தோழர் ரோஹான விஜேவீர அவர்களின் 55வது பிறந்த நாள் ஜூலை 14 திகதியாகும். 1943ம் ஆண்டில் பிறந்த தோழர் விஜேவீர அவர்கள் மக்கள் விடுதலை முன்னனியினை் நிர்மாணிப்பாளராவார். அவர் தனது வாழ் நாளில் அதிகமான காலத்தை முழு நேர தொழில் புரட்சிவாதியாக அர்ப்பணித்தவராவார். நேர்மையாக தியாகமனப்பான்மையோடு மக்களுக்காக கஷ்டப்பட்டு வேளை செய்யும் கலையை இலங்கை அரசியலுக்கு படிபித்த முதலாவது நபரும் இவராவர்.

கொலைகார ஐ.தே.க. அரசாங்கத்தினால் தோழர் விஜேவீர அவர்களை கொலை செய்யப்பட்டது, 1989 நவம்பர் மாதம் 13 திகதியாகும்.

சீகிரிய ஓவியமாய்
அடக்கி ஒடுக்கப்பட்ட
பட்டாளி வர்க்கத்தின்
சிந்தையில் பதிந்துவிட்ட
மக்கள் விடுதலை முன்னணியின்
சிற்பியே..!
செங்கொடிக்கு
வரைவிலக்கணம் வகுத்து
வழிகாட்டி
போலித்
தலமைகளை தலைகுனிய
வைத்த தன்நிகரில்லா
தலைவனே!
மார்க்ஸிய தத்துவத்தின்
திசையறிகருவியே!
துயருரும் மக்களுக்கு
தோழ் கொடுத்த
தொண்டனே!
கொள்கைக்காய் துணிந்து
போரிடும் தோழர்களை
உருவாக்கிய பிரம்மனே
நாட்டை நரகத்தனமான
முதலாளித்துவத்திலிருந்து
விடுவிக்கப் பாடுபட்ட
குற்றத்திற்காகவா
நீ கொடூரமாக
கொல்லப்பட்டாய்!
உன் இறப்பின் மூலம்
நாங்கள்
கற்றுத்தெளிந்த பாடங்கள்
ஆயிரம்... : ஆயிரம்...!
மனிதனை நேசிக்காதவன்
மனிதனல்ல என்ற உன்சொல்
கட்சி அரசியல் பேரால்
கடைவிரித்து போம்பேசி
பணம் சுருட்டும் கும்பலுக்கு
தலையில் விழுந்த பாராங்கல்
பிறந்த பொன்நாட்டை
மறந்தும் நேசிக்காத
வேஷதாரி தலைவர்கள் நடுவே
நீ...தாயகத்தை
நெஞ்சில் சுமந்து
நினைவில் வாழ்ந்த நாயகன்
நீ வழிவகுத்த பாதை
கோட்டான்களும்,கழுகுகளும்,
குள்ளநரிகளும், நயவஞ்சகர்களும்,
காட்டிகொடுப்போரும்
சென்ற வழியல்ல
போர்குணம் கொண்டோரும்
புரட்சி மனம் கண்டோரும்
மாரதட்டிச் சென்ற
புதிய பாதையன்றோ ஒடுக்கப்பட்ட
மக்களுக்டகாய்
உயிர்கொடுத்த உனக்கு
உண்மையில்மரணமில்லை
மண்ணும் விண்ணும்
உள்ளவரை உன் நாமம்
நிலைத்து வாழும்.

## ஜூலை 23 ம் திகதி இடதுசாரிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

'யுத்தத்தைக் காட்டி தேர்தலை ஒத்திப் போடாதே' என்ற தொனிப்பொருளில், JVP, நவ சம சமாஜக் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி உட்பட பொதுஜன அமைப்புகளும், தொழிற்சங்கங்கள் பலவும் ஒன்றிணைந்து நடத்தப்போகும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஜூலை 23 ம் திகதி பி.ப. 4.00 மணிக்கு கோட்டையில் நடைபெறும். நாட்டைப் பாதிக்கும் பொதுவான பிரச்சினைகளின் போது ஒன்றுசேர்ந்து செயற்படுவதற்காக மேற்படி கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாக J.V.P. கூறுகின்றது

## மாகாணசபைத் தேர்தல் ஆகஸ்ட் 28 ம் திகதி

மேல் மாகாணசபைக்கும், சப்ரகமுவ மாகாண சபைக்குமான வேட்பு மனுத் தாக்கல் 15.08.98 நண்பகல் 12 மணிக்கு முடிவுற்ற கையோடு ஆகஸ்ட் மாதம் 28 ம் திகதி மாகாணசபைத் தேர்தல்கள் ஒரேதினத்தில் நடத்துவதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற குழப்ப நிலையில் இருந்த பொது மக்கள் மனதில் ஓரளவு நம்பிக்கையின் சாயல்கள் தெரிய ஆரம்பித்துள்ளன. என்றாலும் தேர்தலை தள்ளிப் போடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக தென்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஆகஸ்ட் 8ம் திகதியோ அதற்கு முன்னரோ நாடு பூராவும் அவசரகால சட்டத்தை அமுல்ப்படுத்த வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அரசாங்க உயர்மட்ட அரசியல் வாதிகளும் UNP யும் இணைந்து திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றன.

நாட்டின் செயற்கையான பயங்கர நிலையை நிர்மாணித்து, அதனைக் காரணம் காட்டிதேர்தலைத் தள்ளிப் போட நடக்கும் சூழ்ச்சியைத் தோற்கடிக்க ஜனநாயகத்தை நேசிக்கும் எல்லாச் சக்திகளும் ஒன்றிணைந்து வாக்களிக்கும் உரிமையை வென்றெடுக்க முன்வர வேண்டாமா?

## ஜனாதிபதி தேர்தல் வந்தால் கட்சிசார்பற்ற பொது வேட்பாளர்!

[illegible] தேர்தலை ஜனநாயகத்திற்கு முரணான முறையில் தள்ளிப்போட்டு அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதால், அதற்கு முகம் கொடுப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணி தேவையான சகல அரசியல் முடிவுகளையும் இப்போதே எடுத்திருப்பதாக, இது தொடர்பாக "செஞ்சக்தி"க்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவங்ச அமரசிங்க அவர்கள் தெரிவித்தார். இன்[illegible] தேர்தல் [illegible] ஜனாதிபதி முறையை உடனடியாக இல்லாதொழிப்பதை [illegible] இப்போது எமது கட்சி விரிவான எழுச்சி இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறது. எனினும் அந்த மக்கள் எதிர்ப்பை செவிமடுக்காது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் பொதுவான குறிக்கோளை

6ம் பக்கம் பார்க்க....

## ஜயசிக்குறு — பயிற்சி முகாமில் EPDP - PLOTE....!

பாதுகாப்பு அமைச்சரின் 'ஜயசிக்குறு' ராணுவ நடவடிக்கையை தொடர்ந்து நடாத்த ஆள்பலம் போதாமையாலும் ராணுவத்தில் சேருவதற்கு தென்பகுதி இளைஞர்கள் தயக்கம் காட்டுவதாலும் 'வெற்றி நிச்சயம்' நிச்சயமற்ற நிலையில் உள்ளது. இதனை சமாளிக்க EPDP - PLOTE டைச் சேர்ந்த 300 பேர் அரசாங்க ராணுவப் பயிற்சியாளர்களினால் 'ஜயசிக்குறு' நடவடிக்கைக்காகப் பயிற்றுவிக்கப்படுவதாக வெளிநாட்டுச் செய்தி அறிக்கையொன்று கூறுகிறது.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள் மேற்படி இயக்கங்களால் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட செய்திகளில் உண்மை இருக்கலாமென்று மேற்படி செய்தியை ஆதாரங்காட்டி தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# மாத்தளை மக்கள் சேவைகள் பல நடைமுறையில்

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலின் போது மாத்தளை மாவட்டத்திற்கு பிரதேசசபை பிரதிநிதிகளாக ம.வி.மு வில் தேர்ந்தெடுக்கப்பட்டது 4 பேர் மாத்திரமே. அந்த நான்கு பிரதேசசபை உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தும், ம.வி.மு மக்கள் சேவை நிதியிலிருந்தும் மாத்தளை மாவட்டம் முழுவதிலும் 10 திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த பத்தில் ஐந்து இப்போது வேலைகள் முடியும் தருவாயில் இருப்பதாகவும், மற்ற ஐந்தும் துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் உக்குவளை பி.சபை உறுப்பினர் ஜயதிலக ஏரமிணிகம, மாத்தளை பிரதேசசபை உறுப்பினர் கமகெதர திஸாநாயக, தம்புல்ல பிரதேச சபை உறுப்பினர் தம்மதிஸ்க பண்டார, கலேவெல பி.சபை உறுப்பினர் சுனில் ரணவீர போன்ற தோழர்களினதும் மாவட்டத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்களினதும், அனுதாபிகளினதும் ஒத்துழைப்போடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் 10 திட்டங்கள் கீழ்வரும்.

| | திட்டத்தின் பெயர் | பிரதேசசபை பிரிவு |
|---|---|---|
| 1) | நவரத்ன கொட வீதியை மறுசீரமைத்தல் (பன்முக நிதியிலிருந்து) | உக்குவெல |
| 2) | வாரியபொல மரண விடுதி மறுசீரமைத்தல் (பன்முக நிதியிலிருந்து) | உக்குவெல |
| 3) | மாஉஸ்ஸாவ சன் சமுக நிலையம் கட்டுதல் (பன்முக நிதியிலிருந்து) | உக்குவெல |
| 4) | நுகபிட்டிய கிணறு மறுசீரமைத்தல் | உக்குவெல |
| 5) | நாலந்த மத்திய வித்தியாலய குடிநீர் திட்டம் (ம.வி.மு உள்ளூராட்சி சபை உறுப்பினர் நிதி) | லக்கல |
| 6) | செலகம மகா வித்தியாலய குடிநீர் திட்டம் (ம.வி.மு உறுப்பினர் நிதியிலிருந்து) | மாத்தளை |
| 7) | இம்புலந்தனாவ வாய்க்கால் (60 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சக் கூடியது) புதுப்பித்தல் (ம.வி.மு உறுப்பினர் நிதியிலிருந்து) | மாத்தளை |
| 8) | கொட்டுவே கெதர அய்தாய்வித்த பொது வீதி மறுசீரமைத்தல் (பன்முக நிதியிலிருந்து) | மாத்தளை |
| 9) | கவடயா அமுன மயானத்தை மறுசீரமைத்தல் (பன்முக நிதியிலிருந்து) | மாத்தளை |
| 10) | கலேவெல - மதலகஸ்வெல பொது கிணறு ஒன்றை தோண்டுதல் (பன்முக நிதியிலிருந்து) | கலேவெல |

# கெப்பட்டிபொல (தெற்கு) சனசமூக நிலைய திறப்பு!





அப்பிரதேசவாசிகளின் ஒத்துழைப்போடும் ம.வி.மு. உள்ளூராட்சிசபை உறுப்பினர்களின் நியத்தின் மூலம் கட்டி கொடுக்கப்பட்ட, இரண்டு லட்சத்திற்கு மேலாக பெருமதியைக் கொண்ட அலங்காரமான சனசமூக நிலயமும் சிறுவர் பாடசாலையும் கடந்த 12ம் திகதி மு.ப. 10 மணிக்கு ம.வி.மு பிரச்சார செயலாளர் தலைமையில் திறந்துவைக்கப்பட்டு மக்களுக்கு சொந்தமாக்கப்பட்டது. பிரதேசத்தில் பெரும் திரளான மக்களும் சமுக சேவையாளர்களும் கலந்துக் கொண்ட இச்சந்தர்ப்பத்தில் தெகிவளை-கல்கிஸை நகரசபை உறுப்பினர் தோழி சமன்மலி குணசிங்காவும் கலந்துக்கொண்டார்.

மின்சாரம், மலசல கூடம் போன்ற அணைத்தையும் கொண்டு நிர்மானிக்கப்பட்ட இந்த சனசமூக நிலயம் திறப்பு விழாவை சமுக நலவிரும்பிகளே ஏற்பாடு செய்திருந்தார். இப்பிரதேச வாசிகளால் வெலிமடை பி.சபை (ம.வி.மு) உறுப்பினர் தோழர் சமித நந்தன குணவரத்தனாவிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இக்கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டது.

குறுகிய காலத்தில் கட்டிடத்தை கட்டி முடித்து மக்களுக்கு சொந்தமாக்கப்பட்டதையிட்டு பொ.ஐ.மு - ஐ.தே.க வாக்களித்த ஆதரவாளர்கள் ஆச்சரியத்துக்குள்ளாகி, மக்கள் விடுதலை முன்னணியை நுல அனித்திரள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். சனசமூக நிலையத்தை திறப்பு விழாவையே படத்தில் காண்கிறீர்கள்.

# நவகிரியாவ பாடசாலை அதிபர் ம.வி.மு விடம் கேட்கிறார்

மக்கள் விடுதலை முன்னணியின் உள்ளூராட்சி உறுப்பினர் நிதியத்தினால், அம்பாறை நவகிரியாவ பாடசாலைக்கு வாசிகசாலை ஒன்றை பெற்று தருமாறு கேட்டு அப்பாடசாலை அதிபர் ம.வி.மு செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார். வட-கிழக்கு யுத்த நிலமைகளுக்கு முகம் கொடுத்திருக்கும் ஓர் கிராமத்தில் அமைந்திருக்கும் பின்தங்கிய பாடசாலைக்கு வாசிகசாலையொன்றை பெற்று தருவதற்கான ஏற்பாடுகளை செய்யும் படிகேட்டு பாடசாலை அதிபர் கடிதத்தில் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக 'செஞ்சக்கு' ம.வி.மு பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்களை கேட்டபோது, அவர் இப்போது இது தொடர்பான சகல விடயங்களையும் அம்பாறை மாவட்ட கமிட்டிக்கு அறிவித்து இதை நிறைவேற்றுவதற்கு ஏதுவான காரணிகளை கவனித்து உடனடியாக அறிவிக்கும்படி கேட்டுள்ளோம். (அரசதிகாரிகளிடமிருந்து எழக்கூடிய பிரச்சினை) எழாது இருந்தால் பாடசாலை அதிபர்க் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுப்போம். என்று கூறினார். இத்துடன் பாடசாலை அதிபர் ம.வி.மு செயலாளர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

# அநுர யூ. என். பி யிலிருந்து வெளியேற்றப்படுவார்?

சில நாட்களுக்கு முன் இந்தியாவுக்குச் சென்ற அநுர பண்டாரநாயக, அங்கு சத்திய சாய்பாபாவிடம் தான் பிரதமராவதற்காக ஆசி பெற்றுக் கொண்டு இலங்கை திரும்பிய பின் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் சார்பாக செய்திகள் வெளியிட்டதன் காரணமாக, கட்சியின் கட்டுக்கோப்பு சம்பந்தமாக விசாரித்து, அவரை கட்சி அங்கத்துவத்திலிருந்து விரட்டும் முயற்சியொன்று நடைபெறுவதாக 'சிரிகொத்த' செய்திகள் தெரிவிக்கின்றன.

அநுரா பண்டார நாயக சம்பந்தமாக ஜனாதிபதி அவ்வளவு எதிர்ப்புக் காட்டாத காரணத்தால், பிரதமர் இறப்பதற்கு முன் அநுராவை பொ.ஐ.மு. அரசாங்கத்தின் பிரதமராவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாலும், அநுரா பண்டாரநாயக பொ.ஐ.மு.க்கு சேருவதற்கு முன் அவரை UNP யிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்றும், அப்படிச் செய்வதன் மூலம் தமக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை குறைத்துக் கொள்ள முடியுமென்றும் அநுர விரோதி, ரணில் பிரிவிலுள்ள சிலரின் கருத்தாகும். அதன்படி, இன்னும் சில தினங்களில் அநுரா பண்டாரநாயகாவற்கு எதிராக ஒழுக்க நெறி நடவடிக்கையொன்றை எடுத்து அதன் பிறகு அவருடைய கட்சி அங்கத்துவம் தற்காலிகமாக நிறுத்தப்படு மென்பதும் தெரிகிறது.

இவற்றை ஏற்கனவே தெரிந்து கொண்ட அநுர பண்டாரநாயக, தன்னைத் தாமதிக்காது பிரதமராக்கும் படி தனது தாயாரிடம் கேட்டுள்ளார். இதற்கிடையில் அமைச்சர் ரத்வத்தயினால் தூண்டி விடப்பட்ட கெபினட் அமைச்சர்கள் சிலர், எக்காரணத்தைக் கொண்டும் அநுரா பண்டார நாயகாவை தமது கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்று ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்ட போதும் ஜனாதிபதி ஒன்றுமே கூறாது மௌனம் சாதித்ததாகத் தெரிகிறது.

## மிஸ்டர் பர்ட்டிக்கு பதிலாக மிஸிஸ் பர்ட்டி

'ரஜரட்ட மக்களுக்காக மந்திரிப்பதவியைத் துறந்த' எனும் 'ரஜரட்ட வீரத் தளபதி' என்னும் பதாதைகளையும், போஸ்டர்களையும் ஒட்டிய பர்ட்டி திசாநாயக அமைச்சர், கடைசி நேரத்தில் வடமத்திய தலைமை அமைச்சர் பதவிக்காக போட்டியிடுவதற்கு தனது மனைவியை நிறுத்தியுள்ளார். தனது உருவத்தை உள்ளடக்கிய பாரிய கட் அவுட்டுகளை அநுராதபுர பிரதேசத்தில் பார்வைக்கு வைத்த பர்ட்டி, தமது பாரியாரை போட்டிக்கு நிறுத்தியதன் மூலம் தானே ஏற்படுத்திய தம்பட்டத்தை தானே நீக்கிக் கொண்டதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

# பிரதமர் பதவிக்கு ரத்வத்தை போட்டியை ஆரம்பிக்கிறார்

ஸ்ரீமா பண்டாரநாயகா பிரதமர் அம்மாவின் இறுதிப் பயணம் செல்லாதனால், அந்த பொறுப்பை வழங்குவதற்கான அநுரா பண்டார நாயக்காவைக் கொண்டிருக்கும் சதி நடைபெற்றுக்கொண்டிருப்பதால், அனுரத்த ரத்வத்தை தாம் பிரதமராவதற்காக பல காய் நகர்த்தல் வேலைகளை செய்து கொண்டிருப்பதாக 'செஞ்சக்திக்கு' தெரிய வருகிறது.

அண்மையில் மல்வத்த பீடாதிபதிகள் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டதாவது, யுத்தம் வெற்றிகரமாக முடியும் நிலைமை தென்படுவதால், அது, அதாவது யுத்தம் வெற்றிகரமாக முடியுமென்றால் பிரதமர் பதவிக்கு பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை மிகவும் தகுதியானவர் என்று தாம் கருதுவதாகவும், இந்த அறிக்கையில் கூறப்பட்டது.

அதாவது ரத்வத்தை அமைச்சரின் செயலாளர் சேன திஸநாயக அவர்களால் பீடாதிபதியிடம் இவ்வாறான ஓர் அறிக்கையை விடுக்கும்படி கேட்டுள்ளதாக தெரியவருகிறது. ரத்வத்தை அமைச்சரை பிரதமராக்கும் வேளையில் முக்கியமாக ஈடுபடும் நபர் சேன திஸாநாயகாவாகும். முக்கியமாக நாடுமுழுவதும் உள்ள கோவில் பூஜைக்கு அண்மையில் ரத்வத்தை கலந்துகொண்டுள்ளதும் தனது பாத்திரத்தை மேம்படுத்துவதற்கென்றே தெரிய வருகின்றது. அவ்வாறு கலந்துகொண்ட பூஜைகளில் தாம் பிரதமரான பின்பு (இது நிறைவேறுமானால்) நிறைவேற்றுவதாகக் கூறி பல 'நேர்த்திக்கடன்களை' செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக சகல தகவல்களையும் தேடும்படி தனது ஊடக காரியதரிசி சனத் குணதிலகவை ஜனாதிபதி நியமித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. அவர் தமது ஆதரவாளர்கள், நண்பர்கள் பலரை இக்காரியத்துக்காக நியமித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

அநுரா பண்டாரநாயக்கா பிரதமர் பதவிக்கு வரும் முன்பு தானே அதற்கு திறமையானவர் என்று பூஜகர்கள், பிக்குமார்கள் மூலம் கூறவைத்து மக்களிடமும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலும் ஓர் மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவதாகவும் அவற்றில் முதல் அறிக்கையாகவே மல்வத்து பீடாதிபதியின் அறிக்கையாகும்.

# 'முத்தக் காட்சி' புகைப்படத் தேடுதல்

பொதுசன முன்னணி அரசாங்கத்தின் தலைவிக்கும் அவரது பொதுசன ஊடக ஆலோசகர்க்கிடையிலான இடம்பெறும் முத்தமிடல் காட்சிகளைக் கொண்ட புகைப்படங்களை இப்போது sunday leader

பத்திரிகை ஆசிரியர் இத்தினங்களில் தேடும் படலம்

6ம் பக்கம்....

# கரல்லியத்த உறவினரை விரட்டும் படி ஆர்ப்பாட்டம்!

பாடசாலை அதிபரினால் இளவயது மாணவிகள் சிலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதான சம்பவங்கள் சில அம்பலமாகியுள்ளதால் அதற்கு எதிராக மாணவ மாணவியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர். மேற்படி அதிபர் தான் இதற்கு முன் கடமையாற்றிய 21 பாடசாலைகளிலும் இப்படியான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட போதும், அதிபர் பாராளுமன்ற உறுப்பினர் திஸாநயகாவின் உறவினர் என்பதால், அவருக்கெதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் கல்வி அதிகாரிகள் உள்ளனர். ஆர்ப்பாட்டத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவருக்கு பதவி உயர்வு கொடுத்து கல்விக் காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்துள்ளனர்.

www.padippakam.com



## அரசியல் கண்ணோட்டம்

# ஐக்கிய தேசிய கட்சியின் இறுதிப் பயணம் !

டி.பி விஜேதுங்காவிற்கு பின்பு
.தே.க. யின் தலைமைத்துவ
ரக்கு சாய்ந்து ரணில்
கிரமசிங்காவாகும். அது 17
ட சாபமிக்க கொலைகார
சியலில் இறுதி நடவக்கையின்
அங்கமாகவே நிகழ்ந்தது.
தே.க.யின் 17 வருட சாபத்தை
களால் முடிவுக்குக்
ண்டுவருவது மீண்டும் பச்சை
ந்திலான யானைக்கோ அதாவது
கிய தேசிய கட்சிக்கு மீண்டும்
ந்து நிற்க முடியாதளவுக்கு
நக்குதலுக்குள்ளாகிய
தோல்வியில் தள்ளிவிட்டதன்
மாகும்.

அவ்வாறான பாதாளத்தில்
ளிவிட்ட தோல்வி சாபமிக்க
தே.க.யிற்கு தவிர்க்க முடியாத
த்தான ஒன்றாகும். அவ்வாறு
யற்று கிடந்த யு.என்.பி
லைமைத்துவத்துக்கு இவ்வாறான
ந்நிலையிலேயே தகுதியற்ற ரணில்
ள்ளப்படுகிறார்.

எந்தவிதமான தோல்வியில்
ழ்கிக் கிடந்தாலும் கூட
லங்கை முதலாளித்துவ
ர்க்கத்துக்கும், அதன் பிரதானதோர்
ட்சகனான் ஐக்கிய தேசிய
ட்சிக்கும் இவைகள் மத்தியில்
ளனமாய் இருப்பதை விட
ழுந்திருக்கும் சவாலுக்கு தோழ்
ரடுக்க தீர்மானிக்கப்பட்டது.

ரணிலின் வருகையோடு இக்க
ிலைக்கும் ஏற்படுகின்றது.
தாவது 70ம் ஆண்டு தேர்தலில்
னாவி அடைந்த
டுதோல்வியோடு
ட்டியெழுப்புவதற்கு ஜே.ஆர்
ன்பற்றிய தந்திரோபாயங்களைப்
பாலவே, இப்போது தோன்றியுள்ள
வாலுக்கு முகம் கொடுப்பதற்கு
பொதுசன முன்னணி
அரசாங்கத்துக்கு எதிராகவும்,
ஐ.தே.க. யை பலப்படுத்தும்
வேலைத்திட்டத்துக்கு ரணில்
கைவைத்துள்ளதாக நாட்டு
மக்களுக்கு கூறுவதற்கு முயற்சி
எடுக்கப்பட்டதும் அதற்காக தமக்கு
சார்பான பிரச்சார சாதனங்களைப்
பயன்படுத்துவதற்கு ரணில்
உள்ளிட்ட ஐ.தே.க. செயற்பட்டது.

அதனோடு நடவடிக்கைகள் ஒரு
மூட்டை சகிதம் ரணில் உட்பட
அவரது ஆலோசகர்கள்
படிப்படியாக முன்வைத்தனர்.
எதிர்க்கட்சித் தலைவர் ரணில்
விக்கிரமசிங்க தலைமையில்
சமூகத்திலும், ஐ.தே.கட்சி
உள்ளேயும் இவ்வாறு
நிலைபெறுவதற்கும் அவ்வாறு
நிலைபெற்றுப் பொதுசன முன்னணி
அரசாங்கத்துக்கு எதிராக
நேரடியான எதிர்க்கட்சியாக மாறி
பின்பு அதன் மூலம்
ஆட்சியதிகாரத்தைப்
பெற்றுக்கொள்வதற்காகத்
தெளிவானதோர் செயல்பாடுகளில்
ஈடுபட்டுள்ளனர்

ஒரு முறை ஜே.ஆர். ஐக்கிய
முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக
நாடு முழுவதும் 200
கூட்டங்களைத் தயார் செய்து
நடத்தி அப்போதைய
அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய
தேசிய கட்சியின் சக்தியை
வெளிக்காட்டினர். அதேபோன்று
பொதுசன முன்னணிக்கு மூன்று
வருடம் முடிவடையும்போது ரணில்
உள்ளிட்ட ஐ.தே.கட்சியினர் 150
கூட்டங்களை நடத்தி அவைகளில்
ஏழு எட்டு கூட்டங்களைக் கூட
நாடு முழுவதும் ஒரே நாளில்
வெற்றிகரமாக நடத்துவதற்கு
முடியாது போயினர். நடைபெற்றது
தனது பழைய தலைவனின்
உத்திகளை பேரனின் தலைமையில்

தெருக் கூத்தாகவே நடைபெற்றது.

இவ்வாறு ஒரு கடலை
கட்சிக்குள்ளேயும், ஒரு முறை
மக்கள் மத்தியில்
உறுதிபெறுவதற்காக தந்திரோபாய
செயற்பாடுகளை கையாண்டு
தெளிவாகவே மக்கள் மத்தியில்
இயலாமையை

அம்பலமாக்கியுள்ளனர்.

ஒருமுறை ஜே.ஆரின் கையால்
உயர்வடைவதற்கு
தந்திரோபாயத்தை தேடிய ரணில்,
தனது கட்சி அமைப்பாளர்கள்
சகிதம் கடுவெளைக்குக்
கொண்டுவந்த பால் மா விலை
உயர்வுக்கான எதிர்ப்பு
ஆர்ப்பாட்டத்திலும் 'ஹைட்
பார்க்கில்' நடத்திய 'மக்கள்துன்பம்
தீர்க்கும்' கூட்டத்தின் மூலமும்
தனது இயலாமையை நாட்டுக்கும்
மக்களுக்கும் நல்ல முறையில்
வெளிப்படுத்தி ஏமாந்துள்ளார்.

இவ்வாறு பொதுசன முன்னணி
அரசாங்கத்திற்கு எதிராக நேரடியான
எதிர்க்கட்சியாகவின்றி நாட்டில்
ஐ.தே.க.யின் புனர்ஜென்மத்திற்கு
வைத்த இலக்கும் ரணிலின்
தலைமையின் கீழ் இருக்க
ஐ.தே.கட்சி, தனது இயலாமையை
மிகவும் நல்ல முறையில் மீண்டும்
ஒருமுறை சமூகத்திடம்
படம்பிடித்துக்காட்டியது.

இவைகளில் மிகவும் தெளிவான
முறையில் வெளிப்பட்ட முக்கிய
காரணிதான் இந்நாட்டின் தேசிய
பிரச்சினையாகும். தேசிய பிரச்சினை
இன்று பிரிவினையின் உச்சத்துக்கே
வளர்ந்து வந்தமைக்கு நேரடியான
பொறுப்பேற்க வேண்டிய
ஐ.தே.கட்சிக்கு பொதுசன முன்னணி
அரசாங்கத்தில் அது
மிகப்பெரியதோர் சவாலாக
மாறியுள்ளது. அது பொதுசன
முன்னணி அரசாங்கம் தேசிய
பிரச்சினைக்கு தீர்வாக
பிரிவினைவாதத்தை
சட்டபூர்வமாக்குவதற்காக
முன்வைத்த அரசியலமைப்பு
சட்டத்தின் மூலம் ஐ.தே.கட்சியின்
நிலைப்பாட்டை வெளிக்கொணரச்
செய்தது.

ஐ.தே.கட்சியின் தற்போதைய
தகுதிகள் அனைத்தும்
இக்காரணியினால்
வெளிப்படையாகவே
அம்பலமாகியது. சுருக்கமாக மிகவும்
முக்கியமானதோர் கேள்வி ஐ.தே.க.
முன்னால்
உள்ளது.
அரசாங்கத்தின்
புதிய
அரசியலமைப்பு
யோசனைக்கு
ஆதரவா..?
இல்லையா..?
என்று இங்கு
கேள்வி
எழுப்பப்படுகின்றது.
அக்கேள்விக்கு
நேரடியாக முகம்
கொடுக்க முடியாத
ரணில் தனது முகத்தை மூடி
மறைத்துக்கொண்டு பதிலளிக்க
ஆரம்பித்தார்.

புதிய குறிக்கோள் கொள்கைகள்
சகிதம் முன்னோக்கியும் ஸ்தான

அவைப்பாகவும்
மாற்றியமைப்பதற்காக ரணில்
பதினேழு வருட போலி
வாக்குறுதிகளை மக்கள் முன்
வைத்தாலும் பிரிவினைவாதத்தை
எதிர்க்கவோ அல்லது ஒரு மாற்றுக்
கொள்கை திட்டத்தின் ஊடாக
செல்லவோ முடியாதிருந்தனர்.







அதற்குப் பதிலாக இருபக்கம் சரியும்
நிலையான பதிலை கூறாது தனது
அரசியல் இயலாமையையும்
பலவீனத்தையும் நன்றாகவே
வெளிப்படுத்தினர்.

இந்த அனைத்து செயல்களின்
மூலம் வரலாற்று ரீதியான
ஐ.தே.கட்சியை
முடிவெடுக்கக்கூடிய பல
காரணிகள் நன்றாகத் தென்பட்டது.

நன்றாகத்
தென்படுகிறது. அதன்
முக்கிய
வெளிப்பாடுகளில்
ஒன்று இவர்களின்





ஒருமுறை ரண-'லும்-குரேவுக்கும் இடையிலான மோதல் அது பின்நோக்கிச் செல்லும்போது ஹேமாமா பிரேமதாச-ரணலில் இடையிலும் அப்படியில்லாது, சஜித்-குரே-ரணலில் போட்டியாகவும் வெளிப்படும்போது ஊழல் மோசடிக்கு நேரடியாக முகம் கொடுத்துள்ள விஜேபால மெண்டிஸின் நெருக்கடியும் ஐ.தே.கட்சியின் பிளவுக்கு முன்வரும் மற்றுமொரு முக்கியமான காரணியாகும். அண்மையில் தோன்றியுள்ள அநுராவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவத்துக்கும் தோன்றியுள்ள உட்கட்சி நெருக்கடியை தீர்த்துக்கொள்ள முடியாமையின் முன்வைத்துள்ள மற்றுமொரு நெருக்கடியாக சமூகத்திற்கு அம்பலமாகியுள்ளது.

ஒற்றுமையின்மை. உண்மையாகவே
ஐ.தே.கட்சி என்பது இப்போது
ஒற்றுமையின்மையின் அரிய
குறியீடாக வெளிப்பட்டுள்ளது.
நெருக்கடியை நோக்கி இழுபட்டு

கொண்டிருக்கும் பொதுசன ஐக்கிய
முன்னணி அரசாங்கத்தினதும்
ஐக்கிய தேசியக் கட்சியினதும்
பொதுவான தன்மை இதுவானாலும்
ஐக்கிய தேசியக் கட்சி
தலைமைத்துவத்தின் முன்னால்
மேலும் வளர்ந்துவரும் நெருக்கடி
இத்தினங்களில் நன்றாக

அவதானிக்கக்கூடியதாக
இருக்கிறது.

ஒருமுறை ரணிலும்-
குரேவுக்கும் இடையிலான
மோதல் அது பின்நோக்கிச்
செல்லும்போது ஹேமா பிரேமதாச-
ரணில் இடையிலும்
அப்படியில்லாது, சஜித்-குரே-ரணில்
போட்டியாகவும் வெளிப்படும்போது
ஊழல் மோசடிக்கு நேரடியாக முகம்
கொடுத்துள்ள விஜேபால
மெண்டிஸின் நெருக்கடியும்
ஐ.தே.கட்சியின் பிளவுக்கு
முன்வரும் மற்றுமொரு முக்கியமான
காரணியாகும். அண்மையில்

தோன்றியுள்ள
அநுராவுக்கும்
ஐக்கிய தேசியக்
கட்சி
தலைமைத்துவத்துக்கும்
தோன்றியுள்ள
உட்கட்சி
நெருக்கடியை
தீர்த்துக்கொள்ள
முடியாமையின்
முன்வைத்துள்ள
மற்றுமொரு
நெருக்கடியாக
சமூகத்திற்கு
அம்பலமாகியுள்ளது.
மற்றைய
முக்கிய
பிரச்சினையாக
தேசிய அரசியல்
நீரோட்டத்தில்
முக்கியமான
பிரச்சினைகளின்போது
மிகவும்
பலவீனமான முடியாமையைக்
காட்டும் ஐ.தே.கட்சி அரசியலின்
வெளிப்பாடாகும்.

அது நாம் முதலில்
கூறியதுபோல தேசிய பிரச்சினையில்

கையாண்ட முறையைப் போலவே
'98'ல் உரிய நேரத்தில்
நடத்தப்படவேண்டிய மாகாண
சபைத் தேர்தல் முன்னால் ஐ.தே.க.
காண்பித்த செயற்பாடுகள்
மென்மேலும் கேள்விக்
குறியாக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையானாலும்
உள்ளூராட்சிச் சபைத்
தேர்தலானாலும் உரிய காலத்தில்
நடத்தினால் அதன் பிரதிபலனை
படிப்பினைகள் சமூகத்திடம்
அளவுக்கதிகமான கடுமையான
அனுபவங்கள் கூடிய விலைகளை
கொடுத்த படிப்பினைகள்
கைவசமுள்ளது. அக்காரணிகளை
கேள்விக்குள்ளாக்காது தனக்கு
எந்தவிதத்திலும் வெற்றிகொள்ள
முடியாத ஜனாதிபதி தேர்தலை
கேட்டதன் மூலம் ஐக்கிய தேசியக்
கட்சி தலைவர் ரணிலின் மூடத்தன
அரசியல் இதற்கு நல்லதோர்
உதாரணமாகும்.

மாகாணசபைத் தேர்தல்
பொதுசன முன்னணி
அரசாங்கத்துக்குப் போலவே ஐக்கிய
தேசியக் கட்சிக்கும் ஓர்
தீர்மானகரமானதும் தெளிவான
சவாலாகும். கம்பஹா இதுநாள்
வரை உள்ள மாகாணசபைகளை
கைப்பற்றும் குறிக்கோள்
இலக்கில் நின்றும் கைவசமற்ற
மாகாணசபைகளை வெற்றிகொள்ளும்
வெகுதூர கஷ்டமான
இலக்குவரையிலான நெருக்கடி
ஐக்கிய தேசியக் கட்சியை
நெருக்கடியின் உச்சத்துக்குத்
தள்ளுகின்ற அதேவேளை,
அதேபோல் அராஜகத்தில்
தோல்வியடைந்துள்ள ஐக்கிய
தேசியக் கட்சிக்கு வெற்றி கொள்ள
முடியாத இலக்கை நோக்கி
தள்ளப்பட்டு ஜனாதிபதி
தேர்தலுக்காக அரசாங்கத்தை
அழைக்கும் கோஷத்தை
நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எப்படியாயினும் இவைகளில்
மிகத் தெளிவானதோர் அரிய சாதக
சந்தர்ப்பத்தினை
நிர்மாணிக்கப்பட்டிருப்பது பொதுசன
முன்னணிக்கேயன்றி ஐக்கிய தேசிய
கட்சிக்கல்ல. யுத்தத்தைக் காரணம்
காட்டித் தமது நெருக்கடியிலிருந்து
மீண்டெழ முடியாது இருந்து
மீள்வதற்கான வழியை
தேடிக்கொண்டிருந்த பொதுசன
முன்னணியிடம் ஜனாதிபதி
தேர்தலைக் காட்டிய சந்திரிகா-
ரணில் இருவருக்கிடையே
இழுபட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதி
தேர்தலை சமூகத்தில் முன்னால்
தள்ளிவிடுகின்றனர்.

உண்மையான நெருக்கடியை
பின்நோக்கித் தள்ளிக்கொண்டு
செல்வதற்கு இருசாராரும் இறுதியாக
முயற்சித்தாலும் அதன் நிர்வாணம்
இப்போது வெளிப்பட்டுள்ளது.
ஐ.தே.கட்சி பொதுசன முன்னணியை
தோற்கடித்து ஆட்சி அதிகாரத்தைக்
கைப்பற்றுவதை விட
எதிர்க்கட்சியாக நிமிர்ந்து
நிற்கவேணும் முடியாது
வீசியெறியப்படும் தன்மையில்
உள்ள ரணில் வெளியிடும் கருத்து
ரீதியான ஆர்ப்பாட்டம்
தந்திரோபாயம் மென்மேலும் ஐ.தே.க.
யை சவக்குழியை நோக்கியே
தள்ளப்பட்ட வண்ணமுள்ளது.
அதனால் பொதுசன முன்னணி
தமது நெருக்கடியை ஐ.தே.கட்சியின்
ஒத்துழைப்போடு இன்னும் சொற்ப
காலத்துக்குக் கொண்டு செல்லும்
வாய்ப்புக் கிடைக்கிறது.

www.padippakam.com



இன்று என்னை உற்சாகமூட்டும் அரசியலமைப்பு முறையைப்போல் இதற்கு முன் இந்நாட்டில் எவராலும் கொண்டுவர முடியாத போன ஒன்றாகும். இவ்வாறான செயற்பாடுகள் நாம் ஆட்சிக்கு வந்ததினால் மாத்திரமல்ல. நான் இக்கருத்தை 1966ம் ஆண்டிலேயே முன்வைத்தேன்.இவ்வாறு கூறியது நிறைவேற்று ஜனாதிபதி முறையை உருவாக்குவதற்காக முதன்மையாக நின்று செயற்பட்ட அதன்படி இலங்கையில் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சியாளராக வந்த ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி பேச்சின் போதேயாகும். மிக நீண்ட காலமாக தாம் சர்வாதிகார ஆட்சியாளனாக வரவேண்டும் என்று கண்ட கனவு 1978 ம் ஆண்டிலேயே நிறைவேறியது.அப்போது முதல் இலங்கை பின்தங்கிய முதலாளித்துவ முறையை இழுத்துச் செல்வதற்காக பயன்படுத்திய ஓர் முக்கிய கருவிதான் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையாகும். ஓர் ஆட்சியாளன் வெறியனாக மாறுவதற்கான அளவுக்கதிகமான அதிகாரத்தைக் கொண்டு நிறைவேற்றதிகாரத்தின் ஒத்துழைப்பால் அதிகாரத்துக்கு வந்தோர் பின்பு வெறிகொண்டு தாண்டவமாடிய ஆட்சியாளர்களாக மாறினர். அவ்வாறான வெறித்தனமிக்க 3 ஆட்சியாளர்களின் காலத்தின்போது இந்நாட்டு மக்களுக்கு துன்பகரமான அனுபவங்களையே உரிமையாக்கப்பட்டது. இன்று நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்போம் என்று ஆயிரக்கணக்கிலான வாக்குறுதிகளை வழங்கி சிரம் தாழ்த்தியவர்கள், ஆட்சியதிகாரம் கிடைத்தவுடன் அவ்வதிகாரத்துக்கு இரையாகிய நான்காவது ஆட்சியாளரின் வஞ்சகமான,ஜனநாயக விரோத, ஆட்சிக்கு இந்நாட்டு மக்கள் முகம் கொடுக்கின்றார்கள்.

## "நான் உறுதியளிக்கிறேன்"

ஆனால் 1994ம் ஆண்டு இந்நாட்டு விவசாயிகள், தொழிலாளர், மாணவர், மகளிர்,பொதுமக்கள் அனைவரும் இவ்வாறான ஒன்றை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கொடுங்கோலாண்மையை இல்லாதொழித்தும் இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக இல்லாதொழிப்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும். 17 வருடங்களாக இரத்தமும் கண்ணீரிலும் நனைந்து நலிவுற்றுப் போயிருந்த மக்களின் எதிர்பார்ப்பு அக்கொடுமைகளுக்கு காரணமாக இருந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை பூண்டோடு இல்லாதொழிப்பதேயாகும். இதன் எதிரொலியாகவே அன்று தேர்தல் மேடைகளில் பிரதான வாக்குறுதியாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை மாறியது.

எமது கட்சியினால் 94ம் ஆண்டு ஒக்டோபர் 13ம் திகதி நுகேகொடையில் ஆரம்பிக்கப்பட்ட நிறைவேற்றுஜனாதிபதி முறைக்கு எதிரான மக்கள் எழுச்சிக் கூட்டங்கள் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு முடிபுமாயிருந்தது.

இது பாரிய மக்கள் ஆதரவுடன் தீவிரமாகியது. அடிமனதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு ஆர்வங்கொண்டிருந்த , ஆனால் அதை பகிரங்கமாக கூறமுடியாது இருந்த சந்திரிகா பண்டாரநாயக குமாரணதுங்கா மக்களுக்கு வாய்மூல- எழுத்து மூல



**மிக நீண்ட காலமாக தாம் சர்வாதிகாரத் ஆட்சியாளனாக வரவேண்டும் என்று கண்ட கனவு 1978 ம் ஆண்டிலேயே நிறைவேறியது.அப்போது முதல் இலங்கை பின்தங்கிய முதலாளித்துவ முறையை இழுத்துச் செல்வதற்காக பயன்படுத்திய ஓர் முக்கிய கருவிதான் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையாகும். ஓர் ஆட்சியாளன் வெறியனாக மாறுவதற்கான அளவுக்கதிகமான அதிகாரத்தைக் கொண்டு நிறைவேற்றதிகாரத்தின் ஒத்துழைப்பால் அதிகாரத்துக்கு வந்தோர் பின்பு வெறிகொண்டு தாண்டவமாடிய ஆட்சியாளனாக மாறினார்.**

மூன்று வருடங்களுக்கு முன்பு பொதுசன முன்னணி கூறியது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை மிருகத்தனமானது, மிலேச்சத்தனமானது. அதேபோல், அவர்கள் அதை எதிர்ப்பதாகவும் கூறிக்கொண்டனர். ஆனால் மூன்று வருடத்திற்குப் பின்பு இன்று அவர்கள் நிறைவேற்றதிகாரத்திலும் மறைந்திருக்கும் (முன்பு காணத்தவறியதும் விருப்பமில்லாததும்) நன்மைகள் பலவற்றை, நிறைவேற்றதிகாரத்தைப் பாவித்து நாட்டை அபிவிருத்தி செய்வது, அது மூன்றாம் உலகை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் நிறைவேற்றதிகாரம் தேவையான ஒன்றேயாகும். சந்திரிகா அவர்கள் தனது சேலையில் வளிந்தோடும் கருத்தாக மாற்றப்படுவதற்காக நியதிகளையும் இவ்வாறே ஒப்புவித்தார். அவர் அன்று காட்டிய உதாரணங்கள் ( இன்று மறந்து செல்லுபடியாகாததாக மாற்றியுள்ளார்) இந்தோனேசியா, கொரியா, தாய்வான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளையே உதாரணமாக காண்பித்தார். ஆனால், மிகவும் குறுகிய காலத்தில் இவைகளின் கதி அம்பலமானது. அரசாங்கத்தின் துரதிஷ்டமாகும். ஊதி மேலே பறக்கவிட்ட பலூனில் நிகழ்ந்த அனைத்து நாடுகளும் கார்நிறைந்த பூமியை வந்த வண்ணமுள்ளது. இன்று அந்த நாடுகள் உலகில் முதல்தரமான ஊழல் மோசடி, துஷ்பிரயோகம் நிறைந்த ஜனநாயக விரோத ஏழ்மையிலும் ஏழை நாடுகளாக மாறிவிட்டன. நாமும் அந்த பாதாளத்தை நோக்கியே பயணம் செய்து கொண்டிருக்கின்றோம்.

## என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம்.

களியவளம், திருகோணமலைத் துறைமுகம் லாபத்தை ஈட்டிக் கொடுக்க உருக்கு கூட்டுத்தாபனம், ஒக்சிஜன் கம்பனி , கொட்டகல தோட்டம், கொழும்பு துறைமுகத்தில் எலிஸபெத் இறங்குதுறை ஆகிய விலைமதிக்க முடியாத வளங்களை இந்த அதிகாரத்தைப் பாவித்தல்லவா அரசாங்கம் வெளிநாட்டு வியாபாரிகளுக்கு விற்கிறது? அது மாத்திரமல்ல இல்லாது போகும் வளங்களுக்கு (விவசாயிகளின் உயிர்கள்) எதிராக உழைக்கும் மக்கள் நியாயமாக ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் செய்யும்போது பொலிஸ் ராணுவத்தை ஏவி அவற்றை அடித்து நொருக்கி அடக்குமுறை செய்வது இவ்வதிகாரத்தை பாவிக்கலாமா? தாம் வாழ்வதற்கானஉரிமைக்காக போராடியோரின் உயிர்களைப் பறிக்கவும், பின்பு சட்டத்தை பலவந்தமாகப்பாவிப்பதும் நிறைவேற்றதிகாரத்தின் அல்லவா?

ஊடக தந்திரத்திற்காக போர் குரலெழுப்பிய, அதற்காக பல இயங்கங்களை ஸ்தாபித்த ' ஊடக சுதந்திரத்தின் பாதுகாவலனாக இருக்க வேண்டிய அரசாங்கம், ஊடக உரிமையை பறிக்கும் சட்டங்களைக் கொண்டுவந்தது ஏன்? மக்கள் கூடுதலாக உலகைப்பற்றி தெரிந்துகொள்வதை தவிர்த்து மக்களை அறியாமை பாவமிக்க உலகில் சிறைப்படுத்துவதற்காக அல்லவா! இன்று யுத்தச் செய்தி தணிக்கையை அமுல்படுத்தி யுத்தச் செய்திகளை மாத்திரமல்ல அரசாங்கத்தை விமர்சிக்கும் செய்திகளை வெளியிடுவதும் கூட சம்பிடமிருந்து பறிக்கப்பட்டதும் இவ்வதிகாரத்தின் மூலம் அல்லவா? வடக்கில் புதைகுழிகளை உலகத்திடமிருந்து மறைத்திருப்பது சாதாரண சிவில்



# நிறைவேற்றதிகார ஜனாதிபதி மு

வாக்குறுதியை வழங்குகிறார். நாள் , மாதம், வருடம் உள்ளிட்ட அனைத்து சரித்திரமிக்க பொய்யாக வரலாற்றில் இடம்பிடித்துவிட்ட இந்த வாக்குறுதிகள் 1994 ஒக்டோபர் மாதம் 23 ம் திகதி எழுதப்பட்ட சரித்திர மாபெரும் பொய்யாக மாறிவிட்டது. 1995 ஜூலை 15 ம் திகதிக்கு முன்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்போம் என்று உலக மக்களுக்கு முன்னால் சத்தியம் செய்து வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு 98 ஜூலை 15 ம் திகதிக்கு 3 வருடமும் ஆகிவிட்டது. அரசாங்கத்தின் வஞ்சகமிக்க ஜனநாயக விரோத ஆட்சிக்கு மூன்று வருடம் பூர்த்தியாகும். இவ்வேளையில் நிறைவேற்றதிகார ஜனாதிபதியான் சந்திரிகா பண்டாரநாயக இதுபற்றி எதுவும் பேசாதுள்ளார். இதுவே நிறைவேற்று அதிகாரத்தின் தன்மை. ஒருவருக்கு அதுபோன்ற அதிகாரம் கிடைத்தபோது அவனுக்கோ அவளுக்கோ பழைய கதைகள் அனைத்தும் மறந்து விடும் தன்மையைக் கொண்டுள்ளது.

நான் இருக்கும்வரை நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை தொடர்பாக எந்தவிதமான கவலையும் படவேண்டாம் என்று 1996 நவ.16ம் திகதி 'லங்காதீப' பத்திரிகைக்கு கூறிய சந்திரிகா அதன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களுக்குக் கொடுத்த செய்தி பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒருபோதும் நிறைவேற்றதிகாரத்தைப் பாவித்து நாட்டை கொண்டுசெல்லாது என்றேயாகும். ஆனால் அது உண்மையா?

'அரச நிறுவனங்களை சீர்திருத்தம் செய்கிறோம் என்ற போலி வார்த்தைகளுக்கூடாக நாட்டு வளங்களை பல்தேசிய கம்பனிகளுக்கு விற்கப்படுவது நிறைவேற்றதிகாரத்தின் மூலமாக இல்லையா? நிறைவேற்றதிகாரத்தை உருவாக்கிய 78ம் ஆண்டு சீர்திருத்த அரசியலமைப்பின் 158 வது சரத்துப்படி அதனை மறைந்து அரசாங்கம் தனியார் மய கொள்கையை ஆரம்பித்தது. அதன்மூலம் உலகில் பெறுமதிமிக்க வளங்களான எப்பாவெல பொஸ்பேட் சட்டத்தின் கீழா?

அது மாத்திரமல்ல ஏழை பிள்ளைகளின் கல்வி கற்றுக்கொள்ளும் உரிமையை ஒழிப்பதற்காக 'தயாரிக்கப்பட்ட 'கல்வி சீர்திருத்தம்' என்ற கபட ஒப்பந்தத்தை கல்வி அமைச்சினால் 1997ல் கொண்டுவந்தது ஏன்? அதிகாரத்தைப் பாவித்து ஓர் நாட்டின் தேசிய கொள்கையான கல்வி தொடர்பான பாராளுமன்றத்தில், எதுவிதமான கேள்விகளின்றி அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான சட்டத்தை மக்கள் மீது சுமத்தப்படுவது நிறைவேற்றதிகாரத்தைப் பாவித்தேயாகும்.

## யுத்தமும் மாகாணசபையும்

இப்போது ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் - தேர்தல்களை உதைத்துவிட்டு செயல்படுவதும் இல்லாதொழிப்போம் என்று கூறிய நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையிலேயாகும். மாகாணசபைத் தேர்தலை தள்ளிப்போவதற்கு ... காரணம் கூட அரச... அதற்கான சட்டங்கள... வண்ணமுள்ளது. இத... அரசாங்கம் கூறும் ... யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இ... சௌபாக்கியமேயாகும். ... தேர்தல் வைத்தால் அக... பாதுகாப்புக்கக ... போர்முனையிலிருந்து ... கொண்டு வரவேண்டிய ஏற்படுவதினால் அப்படி... வெல்ல முடியாது. என... வெற்றிகொள்ளும் வரை ... மாதம் வென்று விடுவோ... தேர்தலை தள்ளிப்போட...

யுத்தம் தொடர்பாக ... குறிப்பிடுவதில் பொதுசன... முன்னணி அரசாங்கம் ச... பாபாவையும் மிஞ்சிவிட்ட... தொடர்பாக ஜனாதிபதி க... என்ன? நாம் மிகவும் வி... யுத்தத்தில் ஈடுபட்டோம். யுத்தத்தில் 60வீதம் வெ... பெற்றுவிட்டோம்! மீதமிரு... 40வீதம் மாத்திரமேயாகும்...

www.padippakam.com



ம் ஜூலை 15 ம்

வ.17ம் திகதி சந்திரிகா
யர் கூறினார். இப்போது
40% க்கு என்ன
1996 முதல் ஒன்றரை
கடந்து விட்டது.
கூறுவது தெற்றிலை
கத்தில் குண்டு வெடித்தபோது
ல் குண்டு வெடித்தது.
ளிகையை பூண்டோடு
பட்டபோது, மருதானை
வடிப்பு, மாங்குளத்தில்
ணக்கில் ராணுவத்தினர்
பட்டதும், புகாரா விமானம்
தவழ்ந்தது, இவைதான்
0% யுத்தம் என்றே
ம் கூறுகின்றது.
யுத்தத்தின் முடிவு திகதியை
வதில் முன்நிற்பவர் பாதுகாப்பு
ர் அனுருத்த
தயாகும். (அவருக்கு யுத்தம்
க நல்ல பரிட்சயம்
து) முதலில் நட்சாஸ்திர
கூறியது அவரது கிரகம்
யில் இருப்பதால் ஜனவரி
கி யுத்தம் முடிவுறும்.
அதன்படி அவரை
சரிக்கிர மிக்க பெயரான

'செண்பக குமாரன்' (சபுமல்குமாரயா) என்ற பின்பு அத் திகதி பெப்ரவரி 4ம் திகதிக்கு பின்போடப்பட்டது. இப்போது அவர் டிசம்பர் மாதம் யுத்தம் வெற்றிபெறும் என்று கூறினார். (யுத்தத்தின் கால் அதுவேயாகும்.) ஆனால் இன்னரான வாக்குறுதிகள் சிறுபிள்ளைத்தனமான வாக்குறுதியேயென்பது எல்லோருக்கும் தெரியும். மக்கள் இது தொடர்பாக கூறுவதாவது காலநிலை திணைக்களத்தினால் வெளியிடப்படும் மழைபோன்றேயாகும். அரசாங்கத்தின் செயற்பாடுகளும் இதுவே, தனது ஜனநாயக விரோத செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்காக யுத்தத்தையே காரணம் காட்டுகின்றார்கள். யுத்தத்தைப் பயன்படுத்தி மக்களின் மனநிலையை பலவந்தமாக மாற்றி, பலவந்தமாக அரசாங்கத்தின் ஜனநாயக விரோத தேவைகளை மக்கள் மீது திணிப்பதற்காக நிறைவேற்று அதிகாரத்தைப் பாவிப்பது, யுத்த அரசியலைத் தவிர வேறொன்றுமில்லை.





## தேர்தலை ஒத்திப்போடுவது கெட்ட முன்னுதாரணம் ! அதற்கெதிராக தாமதிக்காது செயல்ப்படுவோம் !


**-ஜே.வி.பி பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா**

மாகாண சபைத் தேர்தலில் தமக்கு வெற்றி நிச்சயமில்லை என்ற காரணத்தால், அதனைத்தள்ளிப் போடுவதற்கு அரசாங்கம் எடுத்த முடிவு நாட்டை அழிவக்குஇட்டுச் செல்லும் கெட்ட முன்னுதாரணமாகும். அதனை மாற்றுவதற்கு தாமதிக்காது செயற்படுமாறு ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்கள் ஜூலை 6ம் திகதி நுகேகொடையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போது அனைத்து உண்மையான ஜனநாயகச் சக்திகளையும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பேசிய தோழர் டில்வின் சில்வா அவர்கள்,

'ஒன்று நடந்து விட்ட பிறகு சத்தம் போடுவதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. தேர்தலை ஒத்திப் போடுவது சம்பந்தமாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன் நாம் இந்த ஆர்ப்பாட்டப் பொதுக் கூட்டத்தை நடத்துகிறோம். ஏனைய ஜனநாயகச் சக்திகளுக்கும் நாம் சொல்கிறோம். தாமதிக்காது இப்படியான எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி, அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக வற்புறுத்தல் செய்யுங்கள் என்று ஜே.ஆரும் இப்படித்தான் ஆரம்பித்தார். தம்மால் வெற்றிகொள்ள முடியாத தேர்தல்களை ஒத்திப்போட்டு, தமக்குச்சாதகமான தேர்தல்களை முன்னரே நடத்தி, அதிகாரத்தைத் தான் தோன்றித் தனமாகப் பயன்படுத்திய ஐ.தே.க நாட்டை ரத்தக் காடாகமாக மாற்றினார். இந்தத் தலைவர்களும் அதனையே தான் செய்யப்பார்க்கிறார்கள்'. அது நடந்துவிட்டபிறகு மனித உரிமைகளைப் பற்றிப் பேசி, புகைப்படங்களை எடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்ப முயற்சி செய்ய வேண்டாம்! அந்த அழிவுக்கான முதல் அடியைத்தான் அரசாங்கம் வைக்கப்போகிறது. இது JVP க்கோ, வேறு அமைப்புக்களுக்கோ உரித்தான ஒன்று அல்ல. அனைத்து உண்மையான ஜனநாயகவாதிகளும் தங்களது எதிர்ப்பை இப்போதே காட்டுங்கள். தனக்குச்சாதகமாக இல்லாததாலேயே அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி தேர்தலை நடத்துவதற்குத் தயங்குகிறது. 2000 வருடத்தில் நடத்தப்பட வேண்டிய 1995 ஜூலை 15க்கு முன் ரத்துச்செய்யப்படவேண்டிய ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை தமக்குச் சாதகமானது என கருதியே அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை வைக்கப்பார்க்கிறது. இந்த யுத்தம் ஜனவரியோடு நின்றுவிடும் என்று யாராவது நினைத்தால் அது முட்டாள்தனம்! தனக்குச் சாதகமான தேர்தலை நடத்துவதற்கே அரசாங்கம் தயாராகிறது. சக்தியிழந்த UNP யும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. மாகாணசபைத் தேர்தல் வைத்தால் தமக்குள்ளே இருக்கும் நாய்ச்சண்டை வெளியே தெரிந்துவிடும் என்று நன்றாக ரணிலுக்குத் தெரியும். அதனால் சந்திரிகாவோடு சேர்ந்து மறைமுகமாக தேர்தலை ஒத்திப்போட முயற்சி நடக்கிறது. நாம் இந்நாட்டு மக்களுக்குச் சொல்கிறோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாகக் கூறி எழுத்து மூலமும் வாய் மூலமும் ஒப்புக்கொண்டு வாக்குறுதியளித்த தலைவியொருத்தி பகிரங்கமாகவே அந்த வாக்குறுதியை மீறி ஜனாதிபதித் தேர்தலுக்கு வரத் தயாராவது உந்துனியோடு தானா என்று பொ.ஐ.முன்னணி, தலைவி, தலைவர்களிடம் கேளுங்கள்! இப்போது தேவை ஜனாதிபதித் தேர்தலல்ல! மேலும் ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம்! நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை உடனடியாக நீக்க வேண்டும். ஆனால், அதனைச் செய்வதை விட்டு விட்டு, அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாரானால், JVP யினராகிய நாங்களும் தயார். சந்திரிகாவையும் ரணிலையும் ஒரு கோஷ்டியில் வைத்து, அந்த ஜனாதிபதித் தேர்தலுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கும் எதிரானதும் சார்பானதுமான இருவகையில் பிரியும் பொதுசன அபிப்பிராய வாக்காக மாற்றுவதற்கு ஜனாதிபதி முறைக்கு உண்மையிலேயே எதிரான எல்லா அரசியல் கட்சிகளோடும் பேசி, அந்த முறையை மாற்றுவதற்கான கட்சிச்சார்பற்ற பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்தவேண்டும் என்ற கருத்தில் நாம் உள்ளோம். அதன்மூலம் சந்திரிகா – ரணில் காணும் கனவை தோற்கடித்து அந்தச் செயலினால் எமக்கு முடியும் என்பது எமது நம்பிக்கை. நாம் இந்நாட்டு மக்களுக்குச் சொல்வதென்னவென்றால், இந்த நிலைமையை விளங்கிக்கொண்டு, நாட்டின் ஜனநாயக உரிமைகள் புதைக்கப்பட இடமளிக்காது, அதனைத் தடுப்பதற்கு முன் வாருங்கள் என்று.

இந்தக் கூட்டத்தில் JVP தலைவர்கள் பலர் உரையாற்றியதோடு JVP அரசியல் குழு உறுப்பினர் தோழர் நந்தன குணதிலக தலைமை தாங்கினார்.

## பதுளை மக்கள் கூட்டம் வெற்றி!



தேர்தலை தள்ளிப்போடுவதற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினால் நடத்தப்பட்ட எழுச்சிக் கூட்டத்தில் இரண்டாவது கூட்டம், கடந்த 12ம் திகதி பதுளை நகரத்தில் நடைபெற்ற பெரும் திரளான மக்கள் கலந்துக் கொண்ட வெற்றிகரமான கூட்டமாகும். கூட்டம் முடியும் வரை மக்கள் மிகவும் உற்சாகத்தோடு இருந்து செவிமடுத்தனர். படத்தில் காணப்படுவது கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியும் மேடையுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# செம்மலை

### இனபேதம் ... ?

கலவியலில் பேதம்
காணாத கயவர்கள்,
வெளியே வெறும்
'எம் இனம் ! எம் இனம் !
என்பதன் அந்தரங்கம்
தன்னலம் தானே... ! ஆம்
அந்த
அரசியல் வியாபாரிகளுக்கு
இனம், மதம், மொழி, சாதி யாவும்
அவர்களின் மூலதனங்கள் ! ஆம்
ஆம்!
தேர்தல் காலத்தில்
அவர்களின் முதலீடுகள் !

அபூ அப்பாஸ்

### கல்லறையில் பொரி.....!

இல்லாத
இயலாதவர்களுக்காக
போராடி தம்மின்னுயிரை
அர்ப்பணித்தோர்
ஆயிரம் ! ஆயிரம் ! !
முதலாளித்துவக்
கொடுமையால்
வாழ்விழந்து
நடைப்பிணமான
பல்லாயிரத்தில்
அடியேனும் ஒருவன் !

எனவே,
நாளை உலகை
ஆளப் போகும்
இளம்
தோழர்களே...!

'செல்வ அதிகார
வெறியர்களை ...
இனவெறியர்களை
அரசியல் வியாபாரிகளை
அழித்து விடுங்கள் ! "

என்பதனைத் தயை கூர்ந்து
என் கல்லறையில்
பொரித்து விடுங்கள்... !

அபூ அப்பாஸ்

### விடிவெள்ளி தெரியுதடா .......!

கஞ்சிக்கு வழியற்றோரை ........ !
கையேந்தி நிற்போரை . வாழ்வின்றி
கண்ணீர் சிந்தும்
கன்னிச் சகோதரிகளை
எண்ணிப் பார்க்கையிலே !
தெருவாழ்வு மேற்கொண்டோரை ...
தெருத்தெருவாக அலைந்து
தொழில் தேடித் திரியும்
தோழர்களைச்க சற்றுச்
சிந்தித்துப் பார்க்கையிலே....!
பொல்லாத வறுமையினால் இலவச
பள்ளிப்படிப்பைக் கூடப் பெறப்
பாக்கியம் பெறாத எம்
சின்னச் சிறுசுகளின்
கிள்ளை மொழிகளாம்
இடியப்பம் ! இடியப்பம் !
ஆப்பே ... ! ஆப்பே .... ! என்ற
அந்தத் துன்பக் குரல்களை
அதிகாலையில் கேட்கையிலே ...!
சமூக அநீதியினால்
தோன்றிய யுத்தத்தினால்
அகதிகளாக்கப்பட்டோரின்
அவலக் குரல்களைக் கேட்கையிலே
அழிவு அனர்த்தங்களை பார்க்கையிலே....!
மதம், மொழி , சாதி, இனம் என்பவற்றை
அரசியல் வியாபாரிகள் தம்
வியாபார மூலதனங்களாக்கி
வியாபாரம்நடத்துவதைப்
பார்க்கையிலே...!
ஈரல் துடிக்குதடா.....!
இரத்தம் கொதிக்குதடா .....!
இதயம் வெடிக்குதடா....!
அதே வேளை, இன்றைய எம்
இளைஞர்களின் விழிப்புணர்ச்சி என்
நெஞ்சைச் சற்றுத் தேற்றுதடா !
நாளை பற்றி ஓர்
நம்பிக்கை பிறக்குதடா ...! விடி
வெள்ளி யொன்று தெரியுதடா ...!

அபூ அப்பாஸ்

1ம் பக்க தொடர்

**அவசரகாலச் சட்டம்.........**

தகவலின்படி, இந்தப் பேச்சு வார்த்தையில் அரசாங்க மேல்மட்ட அரசியல் வாதிகள் சிலரும் அபேட்சகர் பிரிவில் உயரதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

வியாபாரிகள் சிலரையும் வேறு சாதாரண நபர்களையும் கடத்திக்கொண்டுபோய் கொலை செய்தும், பலவிதமான கொள்ளைகளை நடத்தியும் சில அரசியல் வாதிகளினதும் ஆசீர்வாதத்தைப் பெற்று தற்போது தம்புள்ள பிரதேசத்தில் உருவாகியிருக்கும் நிலமையையும் அதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல் அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் பொ.ஐ.மு யின் பிரபல அரசியல் வாதியின் ஒத்துழைப்போடு நடந்த நூற்றுக்கணக்கான கொலைச் சம்பவங்களையும் அந்தக் கொலைக்காரர்களின் செயல்களையும் நாடு பூராவும் அவசரகால நிலைமையை அமுல்ப்படுத்தப் பயன்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் செய்திகளின்படி இந்தச் செயல்களை ஜே.வி.பி யின் மீது சுமத்தக்கூடிய சாத்தியங்கள் பற்றியும் மேற்படி உயரதிகாரிகள் சந்திப்பின் போது ஆராயப்பட்டதோடு அதுதொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

தேவை ஏற்படின் அவசரகாலச் சட்டத்தை அமுல்ப்படுத்த முன் இதுபோன்ற மேலும் பல பயங்கரச் செயல்களை செயற்கையாக நாடு பூராவும் ஏற்படுத்தவும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்க உயர் அரசியல் வாதிகளினது ஒத்துழைப்போடு, தென்பகுதியில் நடக்கும் வன்செயல்களை விசாரிப்பது என்ற போர்வையில் விஷேட அடக்குமுறைப் பிரிவொன்று (விஷேட நடவடிக்கைப் பிரிவு) தென்பிராந்தியத்திற்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அதிபர் செனவிரத்ன பண்டாவின் தலைமையில் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக இந்த அனைத்துச் சம்பவங்களையும் பயன்படுத்த வேண்டுமென்றும் ஒருவேளை அவசரகாலச் சட்டம் நீதிமன்றச் சவாலை எதிர்நோக்கும் பட்சத்தில், நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகப் போதுமான அளவு சம்பவங்களை நாடு பூராவும் செயற்கையாக ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்துள்ளது.

2ம் பக்கத் தொடர்

**முத்தக் காட்சி.....**

ஒன்றை ஆரம்பித்திருப்பதாக தெரிய வருகின்றது. எமக்கு கிடைத்த செய்திகளின்படி 5 லட்சத்துக்குக் கூடுதலான தொகையை அப்படத்திற்காக கொடுப்பதற்குSunday leader ஆசிரியர் முன்வந்திருப்பதாகவும், எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் அண்மிக்கும்போது இப்படத்தை பத்திரிகை மூலம் பிரசுரித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூடுதலான சாதக நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று இவர் கருதுகிறார்.

இதேபோல், அமைச்சர் மங்கள சமரவீரவை மிகவும் பாரதூரமாக பாதிக்கும் பலவிதமான புகைப்படங்கள் இவ்வாசிரியர் கைக்கு கிடைத்துள்ளதாகவும் அவைகளைத் தேர்தல் நெருங்கும்போது பிரசுரத்துக்குப் பயன்படுத்த வைத்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆங்கிலப் பத்திரிகையான Sunday Leader அரசாங்கத்தின் பாரிய வெறுப்புக்குள்ளாகிய பத்திரிகையும் கூட, இவர்கள் கூடிய சீக்கிரம் சிங்களப் பத்திரிகை ஒன்றும் ஆரம்பிக்கப்போவதாக தெரிய வருகின்றது.

1ம் பக்கத் தொடர்

**ஜனாதிபதி தேர்தல் வந்தால்.....**

வெற்றிக்கொள்ளக் கூடிய கட்சி சாரா பொது வேட்பாளர் ஒருவரை முன்வைப்பதற்கான முடிவை எமது கட்சி எடுத்துள்ளதென ம.வி.மு. தலைவர் மேலும் கூறினார்.

கடந்த 19ம் திகதி கூடிய கட்சியின் அரசியல் குழு இது தொடர்பாக இறுதி முடிவை எடுத்துள்ளது. 94, ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதே இன்றைய தேவையாகும். அப்படியில்லாது இன்னொரு ஜனாதிபதி தேர்தலை நடத்தி, இந்த தான்தோன்றித்தனமான , மிலேச்ச அதிகாரத்தை தொடர்ந்தும் இன்னும் பல வருடங்களுக்கு நீடிப்பது இனறைய மக்களின் தேவையல்ல.

இக்காரணிகளை கவனத்தில் எடுத்துப்பார்த்தால் தெளிவாக தென்படுவது இந்த ஜனாதிபதி தேர்தல் நாட்டுக்கு தேவையான தேர்தல் அல்ல. அரசியல் வாதிகளின் தேவைகளுக்காக பலவந்தமாக் சுமத்தும் தேர்தல் என்றே நாம் காண்கின்றோம். அதனால் நாம் முதலாவதாக இன்னொரு ஜனாதிபதி தேர்தல் வேண்டாம்! உறுதியளித்தப்படி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழி! எந்த காலயாங்கத்தின் கீழ் [illegible] ஏதோர் மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டத்தை படிபடியாக கட்டியெழுப்புவதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த ஆர்ப்பாட்டத்துக்கு செவிமடுக்காது ஜனாதிபதி தேர்லொன்று நடத்தப்படுமானால், அப்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைக்கு எதிரான எல்லா அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து அவர்களது பொதுவான உடன்பாட்டோடு அவ்வதிகாரத்தை, இல்லாதொழிக்கும் குறிகோளுக்காக கட்சி சார்பற்ற பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக குறிப்பிட்ட கட்சிகளுடன் ஆலோசிக்கவும் கடந்த 8ம் திகதி கூடிய அரசியல் குழு கூட்டத்தில் முடிவு செய்திருககின்றோம், என்றும் ம.வி.மு. தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க 'செஞ்சக்திக்கு' தெரிவித்தார்.

6ம் பக்கத் தொடர்

**வேற்றுமைக்கு பதிலாக......**

இருக்கும் முரண்பாடுகளை போதிப்பதிலிருந்து ஒதுங்கி கூடுதலாக இணைக்குபாடுகளை வளர்ப்பதன் மூலம் சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களையும் ஓரணியில் கிரட்டும் தேவையை வலியுறுத்துவதாக தோழர் விமல் வீரவங்ச தனது கருத்தில் சுட்டிக் காட்டிய முக்கிய கருத்துக்களாகும்.

பொது நூலக கேட்போர் கூடம் சகல கட்சிகளினதும் சமூகத்தில் முற்போக்களர்களாலும் மண்டபம் நிறைந்து வழிந்தது. கேள்விகளை தொடுத்து அவைகளுக்கு பதிலளித்த போது வேறு எப்போதுமில்லாதவாறு அனைவரது முகத்திலும் சகோதரத்துவ அன்பு மேலோங்கியிருந்தது. இடதுசாரிகளின் கூட்டு நடவடிக்கைகளை ஆரம்பம் வெற்றி பெற்றதிற்கு அதுவே சாட்சியாகும். வேற்றுமைக்கு பதிலாக ஒற்றுமையை உயர்வடையச் செய்யும் உறுதி அனைவரது முகத்திலும் மலந்தது என்பதை மாத்திரம் இறுதியாக குறிப்பிடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



# வேற்றுமைக்கு பதிலாக சமத்துவமிக்கதோர் இடது




ஜுலை மாதம் என்பது இலங்கையில் மிகவும் முக்கியமான கழ்வுகளை கொண்டுள்ளதோர் மாதமாகும். 80 ஜுலை, 83 ஜுலை, 87 ஜுலை, 95 ஜுலையுடன் 98 ஜுலையும் இலங்கை பாட்டாளி வர்க்கத்துக்கு முக்கியமானதோர் செய்தியை கொடுத்துள்ளது. இது இது நாள் வரை ஒன்று சேர்க்க முடியாத இடதுசாரி இயக்கங்களை ஒன்றிணைக்கும் அறிகுறி தென்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப இப்போது கருத்து ரீதியாகவும் மேலும் பல முரண்பாடுகளாலும் சிதைந்து கிடக்கும் இடதுசாரி கட்சிகளையும் தனிநபர்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியின் முதல் நிகழ்வாக "இடது சாரிகள் ஏன் ஐக்கியப்பட வேண்டும்?" என்ற தலைப்பிலான சில இடதுசாரி அமைப்புக்களின் பிரதிநிதிகளின் தலைமையில் கடந்த ஜூன் 22ம் திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்த முக்கியத்துவமிக்க கலந்துரையாடல் ஆரம்பமானது.

சோஷலிச தொழிலாளர் சங்கத்தின் (ஜே.வி.பி) தேசிய அமைப்பாளர் தோழர் கே.டி. லால் காந்த தலைமை தாங்கிய இக்கருத்தரங்கில் பேச்சாளராக நவசம சமாஜக் கட்சித் தலைவர் தோழர் விக்கிரமபாகு கருணாரத்ன, ஐக்கிய சோஷலிச கட்சியின் தலைவர் தோழர் சிறிதுங்க ஜயசூரிய, தேசிய ஆய்வு வட்டத்தின் சார்பில் தோழர் வசந்த திஸாநாயக, உட்பட இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் பிரச்சார செயலாளர் தோழர் விமல் வீரவங்ச கலந்துக்கொண்டார். மிகவும் முக்கிய செய்தி என்னவெனில் பல காலங்களா கருத்து முரண்பாடுகளால் எதிரும் புதிருமாக செயல்பட்ட அரசியல் தலைவர்கள் ஒரே மேடையில் ஒரே குறிக்கோளுக்காக குரலெழுப்புவதே தயாகும், இது நாள் வரை பிரிந்துப் போராடிய, பயணம் செய்த உறுப்பினர்களும் அனுதாபிகள், ஆதரவாளர்களாலும் நூலகம் முழுவதும் இடமின்றி நிறைந்து வழிந்தது.



இன்று இலங்கை முதலாளித்துவ வர்க்கம் சகல முரண்பாடுகளையும் புறம் தள்ளிவிட்டு பாட்டாளி வர்க்கத்தை தொடர்ந்து ஏமாற்றுவதற்காகவும், ஒடுக்குமுறைக்குள்ளாக்குவதற்காகவும் கொள்ளைக்கார சுதந்திர, லாபச் சந்தையை நிலை நிறுத்துவதற்காக ஓரணியில் திரண்டுக் கொண்டிருக்கின்றனர். அதன் அண்மைக்கால நிகழ்வாக இந்தக் குறிப்பை எழுதும் போது உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டிய மாகாண சபைத் தேர்தலைப் பின்போடுவதற்காக ஐக்கிய தேசிய கட்சியும்-பொதுசன முன்னணி என்ற முதலாளித்துவ அமைப்புகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இலங்கை முதலாளித்துவ வர்க்கம் தமது தவிர்க்க முடியாத நெருக்கடியின் முன்னால் நிபந்தனையின்றி, கொள்கையற்ற கூட்டமைப்பின் மூலம் சிங்களம், தமிழ், முஸ்லிம் சகல மக்களையும் ஒடுக்குமுறைக்குள்ளாக்குவதற்கு முயன்றுக்கொண்டிருக்கும் இந்நிமிடத்தில் இந்த இடதுசாரிகளின் ஒற்றுமைக்கான கலந்துரையாடலின் அரசியல் ரீதியான முக்கியத்துவம் மதிப்படப்பட்ட முடியாது ஒன்றாகும். எனவே இந்த ஐக்கிய நடவடிக்கை ஊடாக கூட்டமைப்புக்கான அரசியல் முயற்சியானது முதலாளித்துவ வர்க்கத் தலைமைத்துவத்திற்கு விழும் பாரிய அடி என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. அதனால் "இடதுசாரிகள் ஏன் ஐக்கியப்பட வேண்டும்" கலந்துரையாடலில் உட்கருத்தை நோக்குவோம்.

கருத்தரங்கில் முதலாவது சொற்பொழிவை ஆற்றிய 'தேசிய ஆய்வு வட்டத்தின்' தோழர் வசந்த திஸாநாயகா கூறியதாவது, இது நாள் வரை கட்டியெழுப்பப்பட்ட கூட்டமைப்புக்கள் அனைத்தும் உடன்படக்கூடிய சிறு பிரச்சினைகளின் மூலம் ஒன்றிணைந்தினால் தீர்மானகரமான பிரச்சினையை மறந்து விட்டதினாலும், உண்மையான ஐக்கியத்தை பிரபல்யமான அரசியல் மூலம் கட்டியெழுப்ப முடியாது போனதையும், சுட்டிக்காட்டி எனவே முரண்பாடுகள் மிக்க சக்திகள் மிகவும் உருப்படியான கலந்துரையாடலை நோக்கிச் செல்ல வேண்டும். அது ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ செய்ய முடியும் என்ற கருத்து மாயைக்குள் விழக்கூடாதென்பதை தோழர் திஸாநாயகாவின் வலியுறுத்தினார். மேலும் அவர் கூறியதாவது யுத்தத்தினால் வர்க்கச் சக்திகள் என்றடிப்படையில் ஐக்கியப்படும் சந்தர்ப்பத்தை பறிக்கப்பட்டிருக்கிறதென்றும், நாசம் விளைவிக்கக்கூடிய அடிப்படையில் யுத்தத்தை எதிர்ப்பதற்கு பதில் அதன் ஆழமான அடிப்படை காரணி என்னவென தேடிப்பார்த்து ஜனநாயகத்துக்கான போராட்டத்தை யுத்தத்துக்கு எதிரான போராட்டத்துடன் ஒன்றிணைக்கபடவேண்டும் எனவும் அவர் கூறினார்.





ஐக்கிய சோஷலிச கட்சியின் தலைவர் தோழர் சிறிதுங்க ஜயசூரிய இந்த ஒற்றுமைக்கான முயற்சி வரலாற்று முக்கியத்துவம் பெறுவது இலங்கைக்கு மாத்திரமல்ல இன்று உலகம் பூராவும் இடதுசாரிகள் எப்படி ஐக்கியப்படவேண்டும்? என்ற பேச்சே முக்கியத்துவம் பெற்றுள்ள ஒன்றாகுமென்று கூறினார். சோவியத்தின் உடைவுகளின் பின் ஏகாதிபத்திய வாதிகள் அந்நாடுகளில் போலி 'சுதந்திரம்' என்ற சித்திரத்தை காட்டி சுரண்டலில் ஈடுபட்ட போதிலும் இன்று தென்கிழக்கு ஆசியாவின் நெருக்கடியின் முன்னாள் ஏகாதிபத்திய வாதிகள் நெருக்கடியின் அளவு தென்படுவதாக மேலும் அவர் கூறினார்.

அவரது கருத்தின் பின்பு பேசுவதற்கு வந்த நவ-சம சமாஜக் கட்சியின் தலைவர் தோழர் விக்கிரமபாகு கருணாரத்ன, முழு சமுதாயத்தையும் இராணுவ ஆட்சியை நோக்கி கொண்டுச் செல்லும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்ற இவ்வேளையில் மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் இடதுசாரிகளின் முன்னணிக்காக எடுத்திருக்கும் முயற்சியை வரவேற்றார்.

மேலும் அவர் பேசிய போது படிப்பகம் [illegible]தில் யு.என்.பி - ஸ்ரீ.ல.சு.கட்சிகளுக்கு இரண்டு கொள்கைகள் இருந்தன. பண்டாரநாயக அரச முதலாளித்துவ முறையின் கீழ் சீர்திருத்தை முன்வைத்த அதே வேளை, யு.என்.பி நேரடியாகவே சந்தை முறையை பின்பற்றியது. இன்று இவர்கள் இருவரும் சேர்ந்து முதலாளித்துவ வர்க்கதுக்கு சொர்க்கத்தை நிர்மாணித்தும் தொழிலாளர் வர்க்கத்துக்கு மரணப் பொறியில் சிக்கவைப்பதற்கு தயாராகின்றனர். இன்று வட-கிழக்கில் நடைபெறும் யுத்தம் தமிழ் மக்களை மாத்திரம் நசுக்கும் யுத்தமல்ல பதிலாக இது சிங்கள மக்களையும் அழிக்கும் யுத்தமாக மாறியுள்ளது!! அது நவசம சமாஜ கட்சி தலைவர் தோழர் விக்கிரமபாகு கருணாரத்ன கருத்தரங்கில் வெளியிட்ட கருத்தாகும்.

இடதுசாரிகள் ஏன் ஐக்கியப்படவேண்டும்? கருத்தரங்கிற்கு இந்த இடதுசாரி பிரிவினரை ஓரணியில் திரட்டுவதற்காக முன்னோடியாக செயல்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின அதன் பிரச்சார செயலாளர் தோழர் விமல் வீரவங்ச கருத்தை முன்வைத்து, வேற்றுமையை முன்னோக்கி கொண்டுச் சென்று பாட்டாளி வர்க்க இயக்கத்தை சீர்குலைப்பதற்கு பதில் யதார்த்தத்தில் நிலவும் கருத்து முரண்பாடுகளை புரிந்துக்கொண்டு அவைகள் அடிப்படையில் தடையாக கருதாது இணக்கத்துக்கு வரக்கூடிய ஒற்றுமையின் மூலம் இடதுசாரிகளின் மத்திய நிலயத்தை போஷிப்பதே எங்களது தேவையென்றும் ஒன்றாக போராடும், ஒன்றாக கருத்துக்களை வெளியிடுகின்ற இடதுசாரிகளின் மத்திய நிலையத்தின் தலைமைத்துவத்தின் ஊடாக சமூகத்தில் பாரிய 'ரெடிகல்' மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென அவர் கூறினார். இக்கூட்டு மாகாணசபைத் தேர்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டென குறுகிய நோக்கத்தில் கருத்துக்களை வெளியிடும் ஒரு சில இடதுசாரிகளின் ஐக்கியத்துக்கான முயற்சியை கொச்சைபடுத்துவதற்கு ஒரு சில முனைவதாகவும், ம.வி.மு. இப்பணிக்கு முன்வந்தது அவசரமாக இல்லையென்றும், 50 வருட வரலாற்றுமிக்க கட்சி மாற்று முறையினூடாக நாட்டை அழித்த அதற்காக ஆட்சதிகாரத்தை கைமாற்றிய சூதாட்டத்தை நிறுத்துவது எப்படி? இந்த கட்சிமாற்ற முறையின் கீழ் தான் தேசிய பிரச்சினையை உக்கிரமாக்கப்பட்டது, அடக்குமுறை, வறுமையை உக்கிரமாக்கப்பட்டது, பொதுசன முன்னணி ஆட்சி பீடமேறி முதல் வருடத்தில் 'அடிக்கல்' நாட்டலை மாத்திரமே செய்துள்ளனர். இந்த 4 வருடத்தில் இவர்களால் செய்ய முடிந்திருப்பது அதுமாத்திரமேயாகும். அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இடையில் நெருக்கடி உக்கிரமடையும் போது அந்நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாத போது ஸ்ரீ.ல.சு.கட்சி (பொதுசன முன்னணி என்பது இடதுசாரிகளை திருப்திபடுத்துவதற்கேயாகும்) ஐ.தே.கட்சி ஒத்துழைக்க உடன்படுகின்றனர். இன்று தேர்தலை ஒத்திபோடுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களை அடக்குமுறை செய்வதற்காக பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படும் வதை சட்டமூலங்களை ஒன்றாக கையுயர்த்தி வாக்களிக்கின்றனர். தத்துவார்த்த ரீதியிலும் நடைமுறையிலும் பல முரண்பாடு இருந்தும் கூட இடதுசாரிகளின் ஐக்கியத்தை நாம் காணுவது அதன் அடிப்படையிலேயாகும். அதனால்



7ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com

# செஞ்சக்தி

198/19 பஞ்சிகாவத்தை வீதி,கொழும்பு-10. ☎-345594 E-MAIL-niyamuwa@slt.lk

மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேச தலைமைபீடத்தின் முகவரியும் தொலைமடல் இலக்கமும்

☆ ARUNODAYA, B.P. 485, 75528 PARIS, CEDEX 11, FRANCE,
FAX: 0033 1 40330414
☆ P.O. BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312
☆ E-MAIL-JVP @ i bekkoame.or.jp

## தேர்தல் அரசியலின் ஜனநாயகமும் அவசரகாலச் சட்டமும்

பொதுசன முன்னணி அரசாங்கத்தின் கீழ் மீண்டுமொருமுறை நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை பிறப்பிப்பதற்கான முடிவை எடுத்துள்ளது.

17 வருடங்களாக கொலைகார ஐக்கிய தேசியக் கட்சியின்போது அக்கால அத்தியாயத்தில் நாட்டின் சாதாரண சட்டமாக மாற்றப்பட்டிருந்த அவசரகாலச் சட்டம் பேயின் சட்டமாக பெயர்பெற்றிருந்தது.

இப்போது அந்த பேய் சட்டத்துக்கு மீண்டும் உயிரூட்டுவதற்கு பொதுசன முன்னணி முன்வைத்திருக்கிறது.

ஜனநாயக சூழலை உறுதிப்படுத்துவதில் மிகவும் துன்பகரமான அனுபவங்களை இந்நாட்டு மக்களுக்கு உரித்தாக்கிய நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தை கைவிடுவதற்கு வாய் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் மக்களுக்கு உறுதியளித்த தற்போதைய அரசாங்கம் இப்போது அந்த அதிகாரத்தை பயன்படுத்தி ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைப்பதற்காகப் பயன்படுத்துகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கான தாம் வழங்கிய உறுதிமொழிக்கு 3 வருடம் கடந்துகொண்டுள்ள இந்நிமிடத்தில் அவ்வதிகாரத்தைப் பாவித்து தமது நிர்வாணத்தை மூடி மறைப்பதற்காக அவசரகாலச் சட்டத்தை அழைத்துள்ளனர்.

97 உள்ளூராட்சி தேர்தல் தனது வர்க்கத்தின் வழமையான வன்முறைகளினூடே சென்று வெற்றிபெற்றிருந்த போதிலும், 98ல் மாகாணசபைத் தேர்தலை தனக்கு ஓர் மரணப் பாய்ச்சலாகுமென்றே பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அளவிட்டுள்ளது. அதற்கான உபகரணமாகவே அரசாங்கம் தற்போது அவசரகால சட்டத்தை கையில் எடுத்திருக்கிறது.

அது கூறுவது என்ன?

இலங்கைவாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடமிருந்து எழும் கேள்வி எதுவாகும்?

மீண்டும் சிகப்பு விளக்கின் சமிஞ்சையே இங்கு காட்டப்படுகிறதென மக்கள் புரிந்துகொண்டால் அந்த உண்மைக்கு இலங்கை சமூக வரலாற்றில் ஆயிரக்கணக்கான சாட்சிகள் உள்ளன.

அதாவது அரசாங்கத்தின் கை ஒவ்வொரு நாளும் உயர்வது மக்களால் வெற்றிகொண்ட ஜனநாயக உரிமைகள் மீதேயாகும் என்பது தெளிவுபடும்.

வன்முறையின் மூலம் ஆட்சியதிகாரத்தில் இருப்பதைப் போலவே தேர்தலை தள்ளிப்போட்டு அதிகாரத்தில் இருப்பதும் சட்டவிரோத செயலாகும்.

இதற்கு நல்லதோர் உதாரணம் 83ல் நடத்தப்படவேண்டிய பொதுத் தேர்தலுக்கு பதிலாக மேலும் 6 வருடத்திற்கு நீடிக்கும் சர்வசனவாக்கெடுப்பு இதை நன்றாகவே உறுதிப்படுத்தியது.

அப்போது பாராளுமன்ற அதிகாரமும் ஜனாதிபதி அதிகாரத்தையும் ஒன்றாகச் சேர்த்து முழு சமுதாயத்தின் ஜனநாயக உரிமைகளை தலைகீழாக மாற்றிய கொலைக் கலாச்சாரமே தாண்டவமாடியது. அதற்காக அவர்களால் பயன்படுத்திய ஓர் சிங்கோர் அவசரகால சட்டமாகும். இப்போதும் யுத்தத்துக்கு மறைந்துகொண்டு ஏனைய மாகாணங்களில் நடத்தப்படவேண்டிய மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவும் அதுபோன்றதோர் அபாய அறிகுறியை காரணங்காட்டி தேசிய பாதுகாப்பு என்ற சுலோகத்தை முன்னே விரியுள்ளது.

இப்போது தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி, அதன் மூலம் அவசரகாலச் சட்டத்தையும் அதன் மூலம் தாம் முகம் கொடுக்கும் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்குத் தேர்தலைப் பின்போடும் துடுப்பையும் பயன்படுத்துகின்றனர்.

அரசாங்கத்தின் இந்த சட்டவிரோத ஜனநாயகவிரோத செயற்பாடுகளை தோற்கடிப்பதற்கான பொறுப்பை மக்களிடையே சுமத்தப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சியுடன் சேர்ந்து இங்கே நடத்தப்போகும் செப்படிவித்தையெனும் சதி மேலும் மக்களுக்கு வித்தையாகாது.

அதனால் அது அப்படி நடக்காதென்று காட்டுவதற்காக எதிர்ப்பை தெரிவிப்பதற்காக ஸ்தாபன ரீதியில்

முன்னோக்கிச் செல்ல வேண்டிய கடமை சமுதாயத்திற்கு சவாலாக மாறியுள்ளது.

# யாழ் செம்மணி புதைகுழியின் சொந்தக்காரன் ஜானக பெரேராவா...?

மூன்று வருடங்களுக்கு முன் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாகக் கூறப்படும் 700க்கு அதிகமான குடிமக்களில் கொல்லப்பட்ட 400 பேரின் உடல்கள் குவிக்கப்பட்டிருக்கும் செம்மணி பிரதேச பாரிய புதைகுழியொன்று சம்பந்தமான பீதற்றல் பிசு பிசுத்து விட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கிரிஷாந்தி குமாரசுவாமி வழக்கின் முதலாவது எதிரியான கோப்ரல் சோமரட்ன ராஜபக்ஷவினால் உயர் நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக தெரிவிக்க போதும், இதுவரை எவ்விதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த புதை குழி சம்பந்தமாக பதில் சொல்ல வேண்டிய இராணுவ உயரதிகாரிகள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் நெருங்கிய சகாக்களாக இருப்பது தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. கிரிஷாந்தி குமாரசுவாமி என்ற பாடசாலை மாணவியைக் கடத்திக் கொண்டு போய் கற்பழித்துக் கொலை செய்தது சாதாரண சிப்பாய்கள் என்ற காரணத்தால், அதற்காகச் சட்டப்படி செயல்பட்டு, தாம், மனித உரிமைகள் [illegible] லட்சிய நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச அபிப்பிராயத்தை கட்டியெழுப்ப முயற்சி செய்த அரசாங்கம், இந்தப் பாரிய புதைகுழி சம்பந்தமாக பதில் சொல்ல வேண்டி இராணுவ உயரதிகாரிகளைப் பாதுகாப்பதற்காக, இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காத கொள்கையில் இருப்பதும், இதனால் அரசாங்கம் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

கிடைக்கும் செய்திகளின்படி, யாழ்ப்பாண செம்மலை பிரதேசத்தில் மேற்படி புதைகுழி ஏற்படுத்தப்பட்ட வேளையில் கிழக்கு மாகாணத் தளபதியாகச் செயல்பட்டவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவாகும், மேஜர் ஜெனரல் கருணா திலக என்பவரும் செம்மலைப் பிரதேசத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்துள்ளார். மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, JVP யின் ஸ்தாபகர் தோழர் ரோஹண விஜேவீர கைது செய்ய முயற்சி செய்த இராணுவ உயரதிகாரிகளில் ஒருவராக இருந்ததோடு, ரோஹண விஜே வீர கொலை சம்பந்தமாக குற்றஞ் சாட்டப்படுபவரும் இவராகும். அது தவிர, UNP யின் பயங்கரவாத காலத்தின்போது மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக இவர் மீது [illegible] உள்ளன. மேஜர் ஜெனரல் கருணா திலக என்பவர் மீது கூட UNP பயங்கரவாத கால மனித உரிமை மீறல் சம்பந்த குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. 1989 ஆரம்ப கால கட்டத்தில் களுத்துறை மாவட்டத்தில் நடந்த பாரிய படுகொலைகள் சம்பந்தமாகவும் அதன் பிறகு ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் நடந்துள்ள பாரிய படுகொலைகள் சம்பந்தமாகவும் இவர் பதில் சொல்ல வேண்டியவராவார் என்பது தகவலறிந்தோரின் கருத்தாகும். மேஜர் ஜெனரல் வரை பதவி உயர்வு பெற்ற கருணாரத்தின என்பவர், களுத்துறை மாவட்டத்தில் பயங்கர நிலைமையை உருவாக்கி அரச எதிர்ப்புச் செயல்களைக் கட்டுப்படுத்தி கையோடு அம்பாந்தோட்டைப் பிரதேசத்துக்குச் சென்றதோடு, அவர் [illegible] 170 பேரின் உடல்கள் வீதியோரங்களில் [illegible] வைக்கப்பட்டிருந்தன.

இந்த எல்லா அதிகாரிகளும் ரத்வத்தை அமைச்சரோடு நெருக்கமானவர்கள் என்பதால், யாழ்ப்பாண புதை குழி சம்பந்தமாக விசாரணைகள் நடைபெறமாட்டாது என இராணுவ வட்டாரத்துக்கு பேசப்படுகிறது. செம்மலையிலுள்ள பாரிய புதைகுழியை தோண்டிய மண்ணை [illegible] மாத்திரம் 150க்கும் அதிகமான உடல்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

# உறுதிமொழியை உடைத்து மூன்று வருடம்'!




நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை 1995 ஜுலை 15ம் திகதியோடு இல்லாதொழித்து நாட்டுக்கு புதியதோர் அத்தியாயத்தை ஏற்படுத்துவேன் என்று மக்களுக்கு எழுத்துமூலமாகவும் வாய் மூலமாகவும் வாக்குறுதியளித்த இவ்வுறு நிறைவேற்றதிகார ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அவர் அளித்த வாக்குறுதி மூன்று வருடம் கடந்தும் இன்றும் அதே அதிகாரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறார்.

அதற்கெதிராக இம்மாதம் 15ம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் முன்னால் மக்கள் விடுதலை முன்னணி பாரியதோர் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்துகொண்ட மக்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை உடனடியாக இல்லாதொழி ! இன்னுமோர் ஜனாதிபதி தேர்தல் வேண்டாம் ! என்று சுலோக அட்டைகள் சகிதம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதையே படத்தில் காண்கிறீர்கள்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா, பிரச்சார செயலாளர் தோழர் விமல் வீரவங்ச, அரசியல் குழு உறுப்பினர் தோழர் அஜித் குமார, உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.




படிப்பகம்

கொழும்பு 10,பஞ்சிகாவத்தை வீதி இல 198/19 இல் வசிக்கும் [illegible] ஆகிய [illegible] இல 72/2 [illegible] வீதி [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.